# கிண்ணியாப் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 18 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஒக்தோபர் 15 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்ட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய கிண்ணியா பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய கிண்ணியா பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 6,540,350 தொகையான நிலையான சொத்துகளுக்கு பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 19,700 தொகையான வியாபார அனுமதிப்பத்திர நிலுவைகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,325,758 ஆகும்.

### 1.3.3 வங்கிக் கணக்குகள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| விபரங்கள் | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | காலப்பகுப்பாய்வு<br>06 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குக் குறைவு | காலப்பகுப்பாய்வு<br>01 - 03 வருடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 170 | 475,289 | 402,951 | 878,240 |

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**(அ) பதிவளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 1,459,463 ஆகும்.

**(ஆ) கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,193,588 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 42 ஆம் இலக்க முத்திரைவரி அதிகாரச்சட்டம் | பிரதேச சபை எல்லையினுள் உரித்துறுதிகளின் மாற்றங்களிலிருந்து அறவிடக்கூடிய முத்திரை வரி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு இல. 134 | ஆதன வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) பிரிவு இல. 152 | உரிய தரப்பினரிடமிருந்து தொழிற்தகைமை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) பிரிவு இல. 477(4) | உரிய தரப்பினரிடமிருந்து மிருக வரி |

| | | |
|---|---|---|
| | | அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | பிரிவு இல. 66(1)(3)(4) | கட்டாக்காலி மாடுகள் தொடர்பாக சபையினால் தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) 1989 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி

| | | |
|---|---|---|
| (i) | II ஆம் பகுதியின் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையினால் அசையக் கூடிய மற்றும் அசையாத சொத்துக்கள் என்பவற்றிற்காக பதிவேடுடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | I ஆம் அத்தியாயத்தின் 5(xi) ஆம் பிரிவு | காசு களஞ்சியம் போன்றன தொடர்பில் காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | I ஆம் அத்தியாயத்தின் 5(xii) ஆம் பிரிவு | காசு மற்றும் களஞ்சியங்கள் போன்ற பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து போதிய பிணைவைப்புப் பெறப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | VII ஆம் அத்தியாயத்தின் வேலைகள் 3(178)2 ஆம் பிரிவு | ரூபா 6,734,345 தொகையான பதினெட்டு வேலைகள் பொதுப் போட்டியின்றி வழங்கப்பட்டிருந்தது. |
| (v) | VII கணக்கீடு அத்தியாயத்தின் 16(165) ஆம் பிரிவு | பிரதான பேரேட்டைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vi) | XII ஆம் அத்தியாயத்தின் 214 ஆம் பிரிவு | ஆண்டின் இறுதியில் பின்வரும் இருப்பு விடயங்கள் கணிப்பீட்டுச் சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| | | (i) முத்திரைகள்<br>(ii) காகிதாதிகள்<br>(iii) கட்டிட விண்ணப்பப் படிவங்கள்<br>(iv) பழைய புதினப் பத்திரிகையும் சஞ்சிகைகளும் |
| (vii) | XII ஆம் அத்தியாயத்தின் 217 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | நிதிப்பிரமாண இல. 387 | மீளாய்வாண்டின் போது சபையின் இரண்டு வங்கிக் கணக்குகளில் ரூபா 1,442,447 கூட்டுத்தொகையான மேலதிகப்பற்றுக் காணப்பட்டது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,039,439 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 983,380 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ள படியானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ள படியானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 7 | 6 | 152 | 03 | 43 | 152 |
| (ii) | வாடகைகள் | 1,895 | 1,662 | 1,811 | 1,807 | 1,764 | 1,579 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 450 | 4,122 | - | 328 | 157 | 171 |
| (iv) | வேறு வருமானங்கள் | 1,847 | 5,616 | - | 7,062 | 5,834 | - |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள, ரூபா 1,812,620 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

மீளாய்வாண்டிற்காக பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப்பட்டது | 2010 உள்ளபடியானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப்பட்டது | 2009 உள்ளபடியானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 6,912 | 5,826 | 1,086 | 6,119 | 4,913 | 1,206 |
| ஏனையவை | 7,526 | 2,092 | 5,434 | 9,747 | 1,461 | 8,286 |
| உப மொத்தம் | 14,438 | 7,918 | 6,520 | 15,866 | 6,374 | 9,492 |
| மூலதனச் செலவினம் | 4,308 | 2,965 | 1,343 | 9,100 | 2,182 | 6,918 |
| முழு மொத்தம் | 18,746 | 10,883 | 7,863 | 24,966 | 8,556 | 16,410 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் நிலைத் தரங்கள் | 05 | 06 | (01) |
| ஆரம்ப தரங்கள் | 12 | 11 | 01 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | 18 | 05 | 13 |
| மொத்தம் | 36 | 22 | 14 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 உபயோகமற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீகவளங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் உபயோகமற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்டுகின்றன.

| | விடயங்கள் | விடயங்களின் எண்ணிக்கை | காலப்பகுதி | உபயோகமற்ற அல்லது குறைப்பயன்பாடுடையது |
|---|---|---|---|---|
| (அ) | பிரதியிடல் இயந்திரம் எல்கிவ் - 2135 | 01 | ஒரு வருடத்திற்கு மேல் | குறைப்பயன்பாடுடையது |
| (ஆ) | பிரதியிடல் இயந்திரம் எல்கிவ் - 5235 | 01 | ஒரு வருடத்திற்கு மேல் | குறைப்பயன்பாடுடையது |
| (இ) | மடி கணனி எச்பீ | 01 | ஒரு வருடத்திற்கு மேல் | உபயோகமற்றது |
| (ஈ) | ரேவர் | 01 | ஒரு வருடத்திற்கு மேல் | குறைப்பயன்பாடுடையது |
| (உ) | சிங்கில் மகேந்திரா கெப் | 01 | 06 மாதங்கள் | குறைப்பயன்பாடுடையது |
| (ஊ) | மல்டிமீடியா புரெஜெக்டர் | 01 | 06 மாதங்கள் | உபயோகமற்றது |
| (எ) | டிஜிடல் கெமரா | 01 | ஒரு வருடத்திற்கு மேல் | குறைப்பயன்பாடுடையது |

### 2.5.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,839,632 ஆகக் காணப்பட்டதுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,941,837 ஆகும்.

### 2.5.3 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 951,864 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக அறவீடுகள் நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 137,847 ஆகும்.

### 2.5.4 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்திற்கு மேல் அசைவுறாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 173,544 ஆகும்.

### 2.5.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக மெய்மையாய்வு / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பா 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 6,540,350.

### 2.6 வாகனப் பயன்பாடு

(அ) வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன பாழுதுபார்த்தல் செலவினங்கள் சம்பவத்திரட்டும் புத்தகத்தில் முறையாகப் பதிவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு